(9) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

177. சென்னைப் பல்கலைக்கழகம், மதுரை–காமராஜ் பல்கலைக் கழகங்களின் 1979-ஆம் ஆண்டு திருத்தச் சட்டம் செயலுக்கு வரும் நாளினை நிர்ணயிப்பது தொடர்பாக கல்வித் துறையின் 23–7–1979–ஆம் தேதியிடப்பெற்ற அரசாணை எண். 1305-ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1923–ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7/1923) 50(2)-வது பிரிவு மற்றும் மதுரைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1965) 58(2)-வது பிரிவு ஆகியவற்றின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

178. மோட்டார் வண்டிகளில் வழித்தடம் குறித்து (ப்ளு பிரிண்டை) வரைபடத்தை பார்வைக்கு வைப்பது தொடர்பாக தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் 28–6–1979. ஆம் தேதியிடப்பெற்ற அரசாணை எண். 1595-ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1939) 133(3)-வது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

179. பயணிப் பேருந்துகளில் நின்றுகொண்டு செல்லும் பயணிகளை ஏற்றிச் செல்வது தொடர்பாக தமிழ்நாடு 1940–ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் . . . 1979-ஆம் தேதியிடப்பெற்ற அரசாணை எண். 1412-ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1930–ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1939) 133(3)-வது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

40. கால்நடை வளர்ப்புத் துறைபற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை (ஆறாவது பேரவை) ஒன்பதாவது அறிக்கை).

TAMIL NADU LEGISLATIVE LIBRARY
25 APR 1980
MADRAS-600 009